# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2014/3 - 2017 අප්‍රේල් මස 11 වැනි අඟහරුවාදා - 2017.04.11

*2014/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*அரசாங்க சேவை ஆணைக்குழு*

**அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்**

01. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இங்கு “அ” அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பாக அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

02. ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயப் பரப்பு தொடர்பாகவோ அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாகவோ எழக்கூடிய நிச்சயமற்ற நிலைமையொன்றின்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

03. இதற்கு மேலதிகமாக அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் அரசாங்க உத்தியோகத்தரொருவர் அட்டவணையின் I ஆம் நிரலுக்கு நேரொத்த விடய இலக்கத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுதியைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு எதிராக நடைபெறும் ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின்போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்குமிடத்து அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழு தம்மால் செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் எதனையும் நோக்காது அது தொடர்பாக ஒருவிதமான அதிகாரமும் அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படவில்லை எனக்கருதி தொடர்ந்தும் செயல்படுத்தப்படும்.

04. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, இல. 1989/29 மற்றும் 2016.10.19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள “அ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய கல்வி விடயம் தொடர்பான ஏற்பாடுகள் இதற்கு முன்னரான வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களின் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படலாம் எனக் கருதக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

**அட்டவணை "அ"**

| **நிரல் I**<br>***உத்தியோகத்தர் வகுதி*** | **நிரல் II**<br>***அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்*** | **நிரல் III**<br>***கையளிக்கப்படும் அதிகாரங்கள்*** |
|---|---|---|
| 1. இலங்கை கல்வி நிர்வாகச் சேவை தரம் I மற்றும் அதற்கு மேலான உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர் பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| 2. , yq;if fy;tp epu;thfr; சேவை தரம் I க்கு கீழுள்ள உத்தியோகத்தர்கள் | fy;tp tplaj;Jf;Fg; nghWg;ghd அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர் பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள். |
| 3. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த தரம் I மற்றும் அதற்கு மேலான உத்தியோகத்தர்கள் (இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத் தர்கள் உட்பட) | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| 4 கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த தரம் I க்கு குறைவான உத்தியோகத்தர்கள் (இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத் தர்கள் உட்பட) | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் |

**அட்டவணை "அ" தொடர்ச்சி**

| நிரல் I<br>*உத்தியோகத்தர் வகுதி* | நிரல் II<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | நிரல் III<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 5. இலங்கை அதிபர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள். |
| 6. இலங்கை அதிபர் சேவையின் தரம் I க்கு குறைவான உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு/ ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும் |
| 7. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு/ ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும் |

அட்டவணை "அ" தொடர்ச்சி

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித் துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும் |
| 8. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த / விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 3/2016 பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளும் |
| 9. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள்கோடப் பட்டுள்ள முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு/ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |

**அட்டவணை "அ" தொடர்ச்சி**

| நிரல் I<br>*உத்தியோகத்தர் வகுதி* | நிரல் II<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | நிரல் III<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளும்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும் |

**அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்**

01. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இங்கு "ஆ" அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பாக அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற கல்விச் சேவை குழுவுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

02. ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயப் பரப்பு தொடர்பாகவோ அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாகவோ எழக்கூடிய நிச்சயமற்ற நிலைமையொன்றின்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

03. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, இல. 1989/29 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய மற்றும் இல. 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள "ஆ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய கல்வி விடயம் தொடர்பான ஏற்பாடுகள் இதற்கு முன்னரான வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களின் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படலாம் எனக் கருதக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

**அட்டவணை "ஆ"**

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 1. இலங்கை கல்வி நிர்வாகச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்.<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும். |

**அட்டவணை "ஆ" தொடர்ச்சி**

| ***நிரல் I*** ***உத்தியோகத்தர் வகுதி*** | ***நிரல் II*** ***கையளிக்கப்படும் அதிகாரங்கள்*** |
|---|---|
| | IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 2. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் (இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையைச் உத்தியோகத்தர்கள் உட்பட) | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு /ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்.<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்.<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 3. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த தரம் 1 உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவான பதவி உயர்வு.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்.<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்.<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 4. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த தரம் 1 க்கு குறைவான உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 5. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 6. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்,<br>a) தேசிய பாடசாலைகளின் அதிபர்கள்<br>b) இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அல்லது இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் தரம் I மற்றும் அதற்கு மேலுள்ள தரங்களிலுள்ள உத்தியோகத்தர்கள்.<br>(திணைக்களத் தலைவர்கள் தவிர்ந்த) | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சேவைப் பிரமாணங்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் அந்த பதவிகளிலிருந்து இடமாற்றம் செய்தல். |

**அட்டவணை "ஆ" தொடர்ச்சி**

| *நிரல் I*<br>***உத்தியோகத்தர் வகுதி*** | *நிரல் II*<br>***கையளிக்கப்படும் அதிகாரங்கள்*** |
|---|---|
| 7. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு /ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்.<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>III. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 8. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 9. இலங்கை பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய,<br>I. அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br>II. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த / விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு /ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுகச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 10. கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய இலங்கை பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய சகல உத்தியோகத்தர்களும் (கல்வி அமைச்சின் கீழ் வராத அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தவிர) | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |

01. இந்த அதிகாரக் கையளிப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக இரண்டாயிரத்து பதினேழு (2017) ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி முதல் செயல்படும் வண்ணம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எம்.காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05,

2017, ஏப்பிறல் மாதம் 06 ஆம் திகதி.

4 - 707

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*